நாள் -03.06.2025

**STC. No.**782/2022

**எ.ம.சா.1-பாலசுப்ரமணியம், த/பெ. .**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 03rd **day of June** 2025.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் புகார்தாரரை கடந்த 2013 ஆம் வருடம் அங்கமுத்து மகன் முத்துக்குமார் என்பவர் மூலமாக எனக்கு அறிமுகமானார். அதற்கு முன்பாக புகார்தாரரை எனக்கு தெரியாது. எனது ஊருக்கும் புகார்தாரர் ஊருக்கும் சுமார் 6 முதல் 7 கிலோமீட்டர் இருக்கும். நானும் எதிரியும் ஒரே ஜாதி மற்றும் குளத்தைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்கூறிய விபரம் எனக்கு நானும் அவரும் 2013 ஆம் ஆண்டு அறிமுகமாகிய பின்னரே தெரியவந்தது. முத்துக்குமார் என்பவரை எனக்கு சிறுவயதிலிருந்தே தெரியும் அவர் கண்ணம்பாளையத்தைச் சார்ந்தவர். முத்துக்குமார் மற்றும் புகார்தார் இருவரும் உறவினர்கள் என்றால் சரியல்ல.

2. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் மற்றும் புரோநோட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். நான் கடந்த 201 3 ஆம் வருடம் முருகேசன் சக்திவேல் மற்றும் சண்முகம் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து பைனான்ஸ் வைத்திருந்தார்கள். அவர்களிடம் நான் என்னுடைய சொத்தை முருகேசன் என்பவருக்கு பவர் கொடுத்தேன். மேற்படி முருகேசன் பவர் மூலமாக மேற்படி சொத்தை சக்திவேல் என்பவருக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார். அப்பொழுது மேலும் ஆதரவாக எனது பெயரில் உள்ள federal bank, pattanam branch காசோலைகள் கொடுத்தேன். Promissory note, white paper(2), green paper (2) ஆகியவைகளில் கையொப்பம் செய்து கொடுத்தேன்.

3. 16.12.2021 ம் தேதியன்று நான் எனது வழக்கறிஞர் மூலமாக கொடுத்த பதில் அறிவிப்பில் Promissory note, white paper(2), green paper (2) and மற்றும் 2 cheques கொடுத்ததாக எண்ணிக்கை குறிப்பிட்டு பதில் அறிவிப்பில் சொல்லி உள்ளேளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் எண்ணிக்கைகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக சொல்லி உள்ளதாக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.Ex.D6 to Ex.D10 எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் முத்துக்குமார் என்பவர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. இவ்வழக்கின் புகார்தரார் தான் எனக்கு முருகேசன் மற்றும் சக்திவேலை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு முதலில் முத்துக்குமார் சண்முகம் என்பவரை அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் என்னை முருகேசன் சக்திவேல் மற்றும் சண்முகம் அவர்கள் அலுவலகத்திற்கு வர சொன்னார்கள். நானும் அலுவலகம் நானும் முத்துக்குமாரும் சென்றோம். நான் அலுவலகத்தில் சென்ற சமயம் சண்முகம் அவர்கள் எனக்கு முருகேசன் மற்றும் சக்திவேலை அறிமுகம் செய்து வைத்தார்கள். நான் சொல்வது போல் முத்துக்குமார் எனக்கு யாரையும் அறிமுகம் படுத்தி வைக்கவில்லை என்றும் சண்முகம் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் முருகேசன் மற்றும் சக்திவேலை எனக்கு அறிமுகம் செய்து வைத்து அவர்களிடம் நான் ஏற்படுத்திக் கொண்ட ஆவணத்தில் சண்முகம் அவர்கள் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5. நான் 2002 லிருந்து டெக்ஸ்டைல் தொழில் செய்து வருகிறேன். 2013 காலகட்டத்தில் தனியாக தயாரிப்பு நிறுவனம் தொடங்கினேன். 2013 காலகட்டத்தில் தொழில் அபிவிருத்திக்காக நான் எனக்கு தெரிந்த நபர்கள் மற்றும் வங்கியில் இருந்து கடன் வாங்கினேன் என்றால் சரிதான். நான் வங்கியில் வாங்கிய கடன்களை எனது தொழிலை மூடிவிட்டு அதிலிருந்து வந்த பணத்தை வைத்து கடனை அடைத்து விட்டேன். நான் வங்கியில் வாங்கிய கடனை தொழில் செய்த காலத்தில் சரியாக செலுத்தி வந்தேன். எந்த பாக்கியும் இல்லாமல் இருந்து வந்தது.

நீதிமன்ற நேரமின்மையின் காரணமாக குறுக்கு விசாரணைக்காக ஒத்துழைக்கப்படுகிறது.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.03 20:11:45 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**